# பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி
# இரண்டாம் பத்து

## ஐந்தாம் திருமொழி - பின்னை மணாளனை
## கண்ணன் குழல் வாரக் காக்கையை வாவெனல்

** பின்னை மணாளனைப் * பேரில் கிடந்தானை *
முன்னை அமரர் * முதல் தனி வித்தினை **
என்னையும் எங்கள் * குடி முழுது ஆட்கொண்ட *
மன்னனை வந்து குழல் வாராய் அக்காக்காய்! *
மாதவன் தன் குழல் வாராய் அக்காக்காய்! 1

பேயின் முலை உண்ட * பிள்ளை இவன் முன்னம் *
மாயச் சகடும் * மருதும் இறுத்தவன் **
காயா மலர் வண்ணன் * கண்ணன் கருங்குழல் *
தூய்தாக வந்து குழல் வாராய் அக்காக்காய்! *
தூமணி வண்ணன் குழல் வாராய் அக்காக்காய்! 2

திண்ணக் கலத்துத் * திரை உறி மேல் வைத்த *
வெண்ணெய் விழுங்கி * விரைய உறங்கிடும் **
அண்ணல் அமரர் * பெருமானை ஆயர் தம் *
கண்ணனை வந்து குழல் வாராய் அக்காக்காய்! *
கார்முகில் வண்ணன் குழல் வாராய் அக்காக்காய்! 3

பள்ளத்தில் மேயும் * பறவை உருக் கொண்டு *
கள்ள அசுரன் * வருவானைத் தான் கண்டு **
புள் இதுவென்று * பொதுக்கோ வாய் கீண்டிட்ட *
பிள்ளையை வந்து குழல் வாராய் அக்காக்காய்! *
பேய் முலை உண்டான் குழல் வாராய் அக்காக்காய்! 4

கற்றினம் மேய்த்துக் * கனிக்கு ஒரு கன்றினை *
பற்றி எறிந்த * பரமன் திரு முடி **
உற்றன பேசி * நீ ஓடித் திரியாதே *
அற்றைக்கும் வந்து குழல் வாராய் அக்காக்காய்! *
ஆழியான் தன் குழல் வாராய் அக்காக்காய்! 5

கிழக்கில் குடி மன்னர் * கேடிலாதாரை *
அழிப்பான் நினைந்திட்டு * அவ்வாழி அதனால் **
விழிக்கும் அளவிலே * வேர் அறுத்தானை *
குழற்கணியாகக் குழல் வாராய் அக்காக்காய்! *
கோவிந்தன் தன் குழல் வாராய் அக்காக்காய்! 6

பிண்டத் திரளையும் * பேய்க்கிட்ட நீர்ச் சோறும் *
உண்டற்கு வேண்டி * நீ ஓடித் திரியாதே **
அண்டத்தமரர் * பெருமான் அழகமர் *
வண்டொத்திருண்ட குழல் வாராய் அக்காக்காய்! *
மாயவன் தன் குழல் வாராய் அக்காக்காய்! 7

உந்தி எழுந்த * உருவ மலர் தன்னில் *
சந்தச் சதுமுகன் தன்னைப் * படைத்தவன் **
கொந்தக் குழலைக் * குறந்து புளி அட்டி *
தந்தத்தின் சீப்பால் குழல் வாராய் அக்காக்காய்! *
தாமோதரன் தன் குழல் வாராய் அக்காக்காய்! 8

மன்னன் தன் தேவிமார் * கண்டு மகிழ்வெய்த *
முன் இவ்வுலகினை * முற்றும் அளந்தவன் **
பொன்னின் முடியினைப் * பூவணை மேல் வைத்து *
பின்னே இருந்து குழல் வாராய் அக்காக்காய்! *
பேராயிரத்தான் குழல் வாராய் அக்காக்காய்! 9

** கண்டார் பழியாமே * அக்காக்காய்! * கார் வண்ணன்
வண்டார் குழல் வார * வா என்ற ஆய்ச்சி சொல் **
விண்தோய் மதிள் * வில்லிபுத்தூர்க் கோன் பட்டன் சொல் *
கொண்டாடிப் பாடக் * குறுகா வினை தாமே 10

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

---